**செய்தி வெளியீடு எண்: 222** **நாள்: 24.03.2020**

**<u>தற்போதைய சூழலில் வேளாண் விளைபொருட்களை அரசு ஒழுங்கு முறை விற்பனைக்கூடங்களில் சேமித்து வைப்பதற்கு அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை</u>** <u>குறித்த</u> **<u>செய்தி வெளியீடு</u>**

கொரோனா வைரஸ் பாதிப்பிலிருந்து தமிழ்நாட்டு மக்களை பாதுகாத்துக் கொள்ளும் வகையில், தமிழ்நாடு அரசு 24.03.2020ஆம் தேதி மாலை 6 மணியிலிருந்து எதிர்வரும் ஏப்ரல் ஒன்றாம் தேதி வரை 144 தடை உத்தரவு பிறப்பித்துள்ளது. இந்த உத்தரவிற்கிணங்க, மாநிலங்களுக்கிடையேயும், மாவட்டங்களுக்கிடையேயும் நடைபெற்று வரும் அனைத்து வகையான போக்குவரத்தும் முற்றிலும் தடைசெய்யப்பட்டுள்ளது.

தற்போது, நெல், நிலக்கடலை போன்ற பயிர்களில் அறுவடைப் பணி நடைபெற்று வருகிறது. ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் விற்பனை செய்வதற்காக, அதிக எண்ணிக்கையிலான விவசாயிகள் தங்களின் விளைபொருட்களை கொண்டு வருகின்றனர். மேலும் விளைபொருட்களை ஏலத்தில் பெறுவதற்கு அதிக அளவில் வியாபாரிகளும் வருகின்றனர். கொரோனா வைரஸ் தாக்கத்தினால் வியாபாரிகளின் வருகை ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் குறைந்துள்ளது. கொரோனா தடுப்புக் காரணமாக, அரசு அறிவித்துள்ள இந்த தடையினால், வேளாண் பெருமக்கள் உற்பத்தி செய்த விளைபொருட்களை சந்தைக்குக் கொண்டு சென்று விற்பனை செய்வதில் சிரமப்படுவார்கள்.

இவ்வாறு, விவசாயிகள் பாதிப்பதை தவிர்த்திட, அரசு ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் உள்ள சேமிப்புக்கிடங்குகளில் வாடகைக் கட்டணம் ஏதுமில்லாமல் விளைபொருட்களை, 30 நாட்கள் வரை பாதுகாத்துக்கொள்ள அனுமதிப்பதோடு, பொருளீட்டுக் கடன் பெறும் போது, தற்போது நடைமுறையில் உள்ள 15 நாட்கள் என்ற வட்டியில்லா காலத்தை ஒரு மாத காலம் நீட்டிக்கவும் அரசு முடிவு செய்துள்ளது. இதன் மூலம், விவசாயிகள் தங்கள்

விளைபொருட்களை சேமிப்புக்கிடங்குகளில் பாதுகாத்து பின்னர் விற்பனை செய்திடலாம்.

சேமிப்புக் கிடங்குகளில் பாதுகாத்து வைத்துள்ள விளைபொருட்களின் அன்றாட சந்தை விலையில் 75 சதவீதம் அதாவது ரூபாய் மூன்று இலட்சத்துக்கும் மிகாமல் பொருளீட்டுக் கடன் பெற்றுக் கொள்ள முடியும். இக்கடனைத் திருப்பிச் செலுத்துவதற்காக அதிகபட்ச கால அளவு 180 நாட்கள் ஆகும். இதற்காக 5 சதவீதம் வட்டி செலுத்தினால் போதுமானது. விளைபொருட்களை அடமானத்தில் வைத்த முதல் 15 தினங்கள் வட்டி வசூலிக்கப்படமாட்டாது. தற்போதுள்ள அசாதாரண நிலையினை கருத்திற்கொண்டு, விவசாயிகள் பொருளீட்டுக்கடன் பெறும்போது, முதல் 30 நாட்களுக்கு வட்டி செலுத்திட தேவையில்லை எனவும் அரசு முடிவு செய்துள்ளது.

தற்போதுள்ள அசாதாரணமான சூழ்நிலையில், விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை சேமித்து வைப்பதற்கு இடமில்லாமல் இருந்தால், அருகில் உள்ள ஒழுங்கு முறை விற்பனைக்கூடங்களில் தங்கள் விளைபொருட்களை ஒரு மாத காலம் எவ்வித வாடகையும் இன்றி சேமித்து வைத்துக் கொள்ளலாம். விவசாயிகள் ஒழுங்குமுறைக் கூடங்களை அணுகி, தங்களது விளைபொருட்களை வாடகையின் பேரிலோ அல்லது பொருளீட்டுக் கடன் பெற்றோ பாதுகாத்துக்கொள்ளலாம்.

மக்களின் நலனுக்காக அரசு அறிவித்துள்ள தடை உத்தரவினால், விவசாயிகள் யாரும் சிரமப்படக்கூடாது என்பதற்காக அரசு அறிவித்துள்ள இந்த வசதியினை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என இதன்மூலம் கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**